2006 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

15—

மானியம்

***379—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனியன் தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு, "சி. பாரம்" குறித்து 90 சதவிகிதம் மானியம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். "சி. படிவம்" பெறாமல் மேற்கொள்ளப்படும் இடை மாநில விற்பனையில் விதிக்கப்படும் 10 சதவிகித மத்திய விற்பனை வரியில், 90 சதவிகிதத்தைப் பின்னலாடை உற்பத்தியாளர்களுக்குத் தொழில் ஊக்குவிப்புத் திட்டச் சலுகையாகத் திருப்பித் தரும் திட்டம், ஏற்கெனவே 4-4-2005 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வணிகர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, அதேபோல, திரு. மோகன் கந்தசாமி ஆகியவர்களுடைய வேண்டுகோளையெல்லாம் ஏற்று, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே இத்திட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. 13-5-2002 முதல் 3-4-2005 வரையிலான காலத்திற்கும், வரியைக் கைவிடுதல்மூலமாக நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு நிதிநிலை அறிக்கையிலே வெளியிட்டதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் துவங்குகிறபோது எழுப்பினேன். மாண்புமிகு வணிக வரித் துறை

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, "சி. படிவம்" சமர்ப்பிக்காதவர்கள் 10 சதவிகிதம் வரி செலுத்தினால், ஊக்குவிப்புத் திட்டத்தின்மூலம் 9 சதவிகிதம் திருப்பித் தரக்கூடிய அந்தத் திட்டம் 2002 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதற்காக, தொழில் உடைமையாளர்கள் பெரும் வரவேற்பைத் தெரிவித்திருக்கின்றார்கள். நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுகூட தொழில் உடைமையாளர் சங்கத்தினுடைய தலைவர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் தலைமையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து நன்றி தெரிவிக்க இங்கே வந்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்து, எனது நன்றியையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் இந்தக் கேள்வியின்மூலமாக மேலும் ஒரு கேள்வி எழுப்ப விரும்புவது, திருப்பூரில் உள்நாட்டு விற்பனைக்காகத் தயாரிக்கக்கூடிய பனியனுடைய விலை 20 ரூபாயிலிருந்து அதிகபட்சம் 40 ரூபாய்க்குள்ளே வருகிறது. இப்பொழுது டில்லி போன்ற பல மாநிலங்களில், 100 ரூபாய்க்குக் குறைவாக விலையுள்ள பனியன்களுக்கு முற்றிலுமாக வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே, உள்நாட்டு பனியன் உற்பத்திற்கு மட்டும் அந்த வரிவிலக்கு அளிக்க வாய்ப்பிருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, இந்த 9 சதவிகிதம் மானியமாக, 10 சதவிகிதம் செலுத்தி 9 சதவிகிதம் திருப்பி வாங்குகிற நிலை இருக்கிறது. அரசுக்கு வருவாய் 1 சதவிகிதம்தான் அதிலே வருகிறது. ஆகவே, நடைமுறையில் சில நிர்வாகச் சிக்கல்கள் அதிலே வருகிற காரணத்தினால், அந்த 1 சதவிகிதத்தை நேரடியாகக் கட்டுவதற்குரிய வழியை உருவாக்க முடியுமா என்பதை அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசினுடைய 10 சதவிகித வரி என்பதாலே, அந்த 9 சதவிகிதம் மானியமாகத் தரப்பட்டு வருகிறது. இங்கே 20 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை என்று குறிப்பிட்டார்கள். முன்னாலே அவர்கள் கேட்டிருக்கின்றபோது, 100 ரூபாய்க்கு உள்ளே உள்ள பனியன்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுமா என்று கேட்டிருந்தார்கள். பெரும்பகுதி பனியன்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், அதிலேயுள்ள வரி வருவாயைக் கணக்கில்கொண்டு, அதேபோல அதிலே வரி விலக்கு கொடுக்கிறபோது, இடர்ப்பாடுகளும்

2006 ஆகஸ்ட் 8]

ஏற்படும் என்பதைக் கருத்தில்கொண்டுதான் இதை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திலே இருக்கிற காங்கேயம் பகுதியிலே, தேங்காய் எண்ணெய் உற்பத்தி என்பது மிகப் பெரிய அளவிலே இருந்துகொண்டு இருக்கிறது. இந்தத் தேங்காய் எண்ணெய் முழுவதுமாக வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்தத் தேங்காய் எண்ணெய் சம்பந்தப்பட்டிருக்கிற கேரளா மாநிலத்திலே அரவைக்கு வைக்கிற கொப்பரைத் தேங்காய்க்கு வரி இல்லை. ஆனால், நம்முடைய மாநிலத்திலே அரவைக்கு வைக்கிற கொப்பரைத் தேங்காய்க்கு 4 சதவிகிதம் வரி இருக்கிறது. அந்த வரியை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் கொடுத்திருந்தோம். அது நீக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காய்க்கு உரிய வரியை நீக்குவது பற்றிய பரிசீலனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து தடவப்படாத பாண்டேஜ் இரக துணிகளுக்கு ஏற்றுமதிக்காக மத்திய அரசு மானியம் வழங்கி வருகிற நிலையில் தமிழக அரசு விதித்திருக்கக்கூடிய விற்பனை வரி இரத்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட காலமாக இருந்து வருகிற பிரச்சினை. பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1996–2001 வரையிலான தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் பின்னலாடை உற்பத்தியாளர்கள் ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக அப்போதிருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்

பெரியவர் திரு. மோகன் கந்தசாமி, சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்து, எங்களைப் போன்ற மற்ற கட்சியினரையும் அழைத்துச்சென்று, தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்து, விற்பனை வரியைக் குறைக்கச் செய்து ஒரு நல்ல புத்துயிரை அந்தக் காலத்திலே பெற்றார்கள். ஆகவே, மீண்டும் கலைஞர் ஆட்சி வந்திருக்கின்ற காரணத்தினால், இந்த ஆட்சியில் உள்நாட்டு விற்பனை பின்னலாடைக்கு, வரிக் குறைப்பு செய்யப்படுமா? மேலும், இந்தத் தொழில் அபிவிருத்திக்கு விற்பனை வரித் துறையின்மூலம் வரிச் சலுகைகள் பல்வேறு வகையில் அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலேயே நான் குறிப்பிட்டேன். இது உள்நாட்டு விற்பனை, வெளிநாட்டு விற்பனை என்று பிரித்து அறிவதிலே சிக்கல் ஏற்படும் என்கிற காரணத்தினாலே, இதில் தொடர்ந்து இதேநிலை நீடிக்கப்படும். இது ஒரு சதவிகித அளவிற்குத்தான் வரி என்பது கணக்கிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பெப்சி, கோகா-கோலா குளிர் பானங்களைத் தடை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம்... (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். ஓர் உறுப்பினர் எழுந்து நின்று பேசும்போது இன்னொருவர் குறுக்கிடாதீர்கள். உட்காருங்கள்.